GCI

# மேய்ப்பனின் ஊழியம்

## முகவுரை

பாடத்திட்ட நோக்கம்:

- மேய்ப்பனின் வேதாகம மாதிரியைப் புரிந்துகொள்ளுதல்.
- தேவ அழைப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல்.
- மேய்ப்பனின் ஊழியத்துக்கான ஆயத்தம் குறித்த வேதாகமக் கொள்கைகளைக் கண்டறிய.
- சபையிலும் சமுதாயத்திலும் மேய்ப்பனைச் சுற்றியுள்ள மக்களுடனான உறவைப் புரிந்துகொள்ளுதல்.
- ஆராதனைகளை நடத்தும் முறைகளை அறிய.

## பாட மேற்பார்வை

I. மேய்ப்பனின் ஊழியத்திற்கான அடிப்படை ஆதாரம்
   A. மேய்ப்பனின் ஆயத்தம்
   B. மேய்ப்பனின் நோக்கம்
   C. வேதாகம மாதிரி : நல்ல மேய்ப்பன்
   D. நல்ல மேய்ப்பனின் குணாதிசயங்கள்
   E. பவுலின் நிருபத்திலிருந்து முக்கியக் கருத்துக்கள்
   F. தேவ அழைப்பு
   G. ஊழியத்துக்கான நல்ல நெறிகளை வளர்த்துக்கொள்ளுதல்

II. மேய்ப்பனின் அடிப்படை உறவு
   A. தேவனுடன் உள்ள மேய்ப்பனின் உறவு
   B. மனைவி மற்றும் குடும்பத்துடன் உள்ள மேய்ப்பனின் உறவு
   C. சபை மக்களுடனான மேய்ப்பனின் உறவு
   D. சபைத் தலைமைத்துவத்துடன் உள்ள மேய்ப்பனின் உறவு
   E. ஸ்தல சபையைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் மேய்ப்பனின் உறவு

III. மேய்ப்பனின் பொறுப்புகள்
   A. மேய்ப்பனும் பிரசங்கமும்
   B. மேய்ப்பனும் ஆராதனையும்
   C. மேய்ப்பனும் வீடு சந்திப்பும்
   D. மேய்ப்பனும் ஆலோசனை ஊழியமும்
   E. மேய்ப்பனும் திருமண ஆயத்தமும்
   F. மேய்ப்பனும் மரணமும்
   G. மேய்ப்பனும் பிரதிஷ்டை ஆராதனையும்
   H. மேய்ப்பனும் நிர்வாகமும்
   I. மேய்ப்பனும் தலைவர்களைக் குறித்த கரிசனையும்

GCI

# I. மேய்ப்பனின் ஊழியத்திற்கான அடிப்படை ஆதாரம்

## A. மேயப்பனின ஆயத்தம்

உலகின் எந்த வேலைக்கும் பணியாளர்களைப் பயிற்றுவிக்க நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறோம். எவ்வளவு அதிகம் மேய்ப்பனின் ஊழியத்திற்காக நம்மை நாமே ஆயத்தம் செய்ய வேண்டும்!

### 1. மோசே

இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும்படியாக மோசேக்கு தேவன் நிர்வாக மற்றும் ஆவிக்குரிய விதத்தில் ஆயத்தம் செய்தார். தன் சேவையைத் துவக்கும் முன்பதாக நீண்ட காலம் காத்திருக்கவும் வேண்டியதாய் இருந்தது.

**“மோசே எகிப்த்தியருடைய சகல சாஸ்த்திரங்களிலும் கற்ப்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்.” அப் 7 : 22**

### 2. பவுல்

ஆதித்திருச்சபையின் அப்போஸ்தலனாய் இருக்கும் படியாக பவுலைத் தேவன் ஆயத்தம் செய்தார்.

- ✓ பவுல் சனகெரிப் அமைப்பின் உறுப்பினராய் இருந்தார்.
- ✓ கமாலியேல் பாதத்தில் அமர்ந்து கற்றுத் தேறியவர்.
- ✓ இரட்சிப்புக்குப்பின் அரேபியாவில் சில காலம் இருந்தார்.
- ✓ தமஸ்குவில் 3 வருடங்கள் இருந்தார்.

இவை காத்திருந்து ஆயத்தமாகும் நாட்கள் ஆகும்.

### 3. எலிசா

எலிசா தீர்க்கதரிசியாகிய எலியாவிடம் ஊழியம் செய்யும் காலத்தில் ஆயத்தமாக்கப்பட்டான். 2 இராஜாக்கள் 3 :11

**“எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா”**

GCI

ஒரு நபர் எப்படிப்பட்ட ஆயத்தம் செய்ய வேண்டும்?

கல்வி அறிவு எழுதப் படிக்க உதவியாக இருக்கும். வேதாகமக் கல்விக்காகச் செலவிட்ட நேரமும் ஒரு நபர் ஊழியத்தில் ஆயத்தம் செய்ய அதிக உதவியாக இருக்கும்.

B. மேய்ப்பனின் நோக்கம்

எபேசியர் 4: 7- 13

கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.

ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

மேய்ப்பனின் ஊழியம் தேவனால் அருளப்படும் ஈவு : எபேசியர் 4: 7- 13

1. தேவஜனத்தை ஆயத்தமாக்க வ.12

மேய்ப்பர் சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக தேவஜனத்தை ஆயத்தமாக்க வேண்டும். நன்றாக வளரும் சபைகளில் மேய்ப்பர் பல தலைவர்களைப் பயிற்றுவித்து போதிக்கவும் பிரசங்கம செய்யவும் புதியவர்களை சத்தியத்தில் வழிநடத்தவும் செய்விக்கிறார்கள்.

2. சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக வ. 12

மேய்ப்பன் சபையைக் கட்டியெழுப்பும் பணிவிடைக்காரனாகத் திகழ்பவன். அவர் சபையை உடைத்துப் போடாமல் கட்டியெழுப்புகிறவராக இருக்க வேண்டும்.

GCI

3. **விசுவாசத்தில் ஒருமைப்பட்டவர்களாக்க வ.11**

சபையின் ஒருமனம் மற்றும் சமாதானத்தைக் காக்கும் தலையாய கடமை மேய்ப்பனுடையதாகும். சில வேளைகளில் மேய்ப்பனுடைய கவனக்குறைவால் அவரே சபை உடையக் காரணமாகிறார். **சங்கீதம** 133, ஒருமனம் உள்ள இடத்தில் தேவப் பிரசன்னம் இருக்கும் என்று கூறுகிறது.

4. கிறிஸ்துவை அறியும் அறிவில் வளர வ . 11

கிறிஸ்துவை அறியும் அறிவில் வளரத்தக்கதாக சபை மக்கள் வேத அறிவில் வளரும் நிலைக்கு சபையை ஊக்குவிக்கும் போதனை செய்யும் திறன் படைத்தவராய் மேய்ப்பன் இருப்பது அவசியம்.

5. விசுவாசிகள் **பக்திவிருத்தி அடைய** வ. 12

மேய்ப்பராகிய சபை ஊழியர் தன் ஆடுகள் விசுவாசத்தில் வளரச் செய்ய வேண்டும். விசுவாசிகள் சில கடினமான சூழ்நிலையில் கடந்து போகும்போது மேய்ப்பரின் நல்ல உதவி அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

C. வேதாகம மாதிரி : நல்ல மேய்ப்பன்

**சங்கீதம்** 23 & யோவான் 10

மேய்ப்பன் நல்ல ஒரு இடையனாக, சுய விருப்பத்தை நிறைவேற்றும் வேலைக்காரன் போல இருக்கக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டியது.

1. இயேசு நல்ல மேய்ப்பர் யோவான் 10: 14

**கூலியாள் கூலிக்காகவும** தன் இச்சைகளையும் பேராசைகளையும் நிறைவேற்றுவதில் நோக்கமாய் இருக்கிறான்.

2. மேய்ப்பன் ஆடுகளை வழிநடத்துகிறான். யோவான் 10: 3, **சங்கீதம** 23:2

மேய்ப்பன் ஆடுகளுக்கு முன் செல்கிறான். சபையின் தலைவராக தரிசனத்தை சபைக்கு வெளிப்படுத்துபவராக மேய்ப்பன் இருக்க வேண்டும். கர்த்தர் அவர்களை நடத்த விரும்பும் வழியில் அவர்களை நடத்த வேண்டும்.

மேய்ப்பன் ஆடுகளுக்குத் தலைவனாய் இருந்து அவர்களை நடத்த வேண்டுமே தவிர அவர்களை அடித்துத் துரத்தி விடக் கூடாது.

சில மேய்ப்பர்கள் ஆடுகளை வலுக்கட்டாயமாய்த் தம் சொந்த வழியில் வரச் செய்கிறார்கள். காரணம் அவர்கள் பாதுகாப்பற்ற, தந்திர ஆலோசனை உடைய தலைவர்கள்.

3. மேய்ப்பன் ஆடுகளைப் போஷிக்கிறான். **சங்கீதம்** 23:2

அவைகளுக்குத் தீமை விளைவிக்கக் கூடிய எதையும் உண்டு விடாத படி ஜாக்கிரதையாய் இருக்கிறான். துர் உபதேசத்திலிருந்து ஆடுகளைக் காத்துக் கொள்வது மேய்ப்பனின் கடமை.

4. மேய்ப்பன் ஆடுகளை மீட்டுக் கொள்கிறான். **சங்கீதம்** 23:3

விசுவாசிகள் துன்பங்களில் சோர்ந்து போய் இருக்கும் போது அவர்கள் பின் வாங்க அல்லது விசுவாசத்தை விட்டுத் தூரம் போக வாய்ப்புகள் அதிகம். இப்படிப்பட்ட சூழலில் மேய்ப்பன் ஆடுகளை பிரதான மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த உறவு நிலைக்கு மீட்டுக் கொள்ள வேண்டியது அவசியம்.

5. மேய்ப்பன் ஆடுகளுககு வழி காட்டுகிறான் **சங்கீதம** 23:3

விசுவாசிகள் சில வேளைகளில் தமது முக்கியமான பிரச்சனையைக் கையாளுவது எப்படி என்பதைத் தெளிவாக அறிந்திருக்க மாட்டார்கள். இப்படியுள்ள சூழல்களில் ஜெபம் மற்றும் வேத வசனத்தின் வாயிலாக தேவ சித்தம் அறிய ஆடுகளுக்கு உதவ வேண்டும்.

6. மேய்ப்பன் ஆடுகளைத தேற்றி இக்கட்டான நேரங்களில் அவைகளுடன் நடக்கிறான். **சங்கீதம்** 23:4

7. மேய்ப்பன் ஆடுகளைப் பாதுகாத்து அவைகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். யோவான் 10: 1

தந்திரமும் சூழ்ச்சியும் நிறைந்த உலக மக்களிடமிருந்து ஆடுகளைப் பாதுகாக்க வேண்டிய சில சூழ்நிலைகளை மேய்ப்பன் சந்திக்க வேண்டி வரும்.

8. மேய்ப்பன் இழந்து போனதைத் தேடும் இருதயம் உள்ளவன். யோவான் 10: 16



GCI

GCI

99 ஆடுகளை விட்டுவிட்டு இழந்து போன ஒரு ஆட்டைத் தேடி அலையும் நல்ல மேய்ப்பனைப் போல.

D. நல்ல மேய்ப்பனின் குணாதிசயங்கள்

நல்ல மேய்ப்பன் கீழ்க்காணும் குணாதிசயங்களை உடையவர்.

1. தைரியம்

இயேசு ஏரோதுக்கோ, பிலாததுவுக்கோ பயந்தவராய் இருக்கவில்லை. அப்போஸ்தலன் பவுலும் தைரியம் நிறைந்த மனிதராய்க் காணப்பட்டார். பெஸ்து, அகிரிப்பா போன்ற அதிகாரிகள் முன்பு தைரியமாய் நின்றார். அப். 19: 30

2. ஜாக்கிரதை

ஜாக்கிரதை உள்ளவரை ஆண்டவர் ஆசீர்வதிப்பதை (சோம்பேறிகளை அல்ல) வேதத்தில் வாசிக்கிறோம். நீதிமொழிகள் 22:29 சொல்கிறது : *"தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்."*

வ. 6 -10, 11 சொல்கிறது என்னவெனில் சோம்பேறி தரித்திரனாவான் என்பதே.

3. பகுத்தறியும் திறன்

**ஞானத்தையும்** நிதானத்தையும் உடைய ஒரு பண்பு. பவுல் ரோமர் 14:16ல் கூறுகிறார் : **"உங்கள் நன்மை துஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்."**

4. காலந்தவறாமை

சபை ஆராதனைக்கு எப்போதும் தாமதமாக வரும் ஊழியர் தன் சபையாருக்கு முன் மாதிரியாக இருக்க முடியாது.

5. தேவ பக்தி

மேய்ப்பன் தன் வாழ்வில் தேவ பக்தி உள்ளவராக இருக்க வேண்டும். வேத வசனத்தையும் ஜெபம் மற்றும் பரிசுத்தமான வாழ்க்கையைத் தெரிந்து கொண்டு மாதிரியாக வாழ வேண்டும்.

GCI

ஏசாயா 52 : 11 தேவ ஊழியர்களை எவ்வாறு வாழ வேண்டுமென அறிவுறுத்துகிறது. "புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம் விட்டுப் போங்கள் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்."

6. தாழ்மை

1 பேதுரு 5:3-6 "நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

7. மன்னிக்கும் ஆவி உடைய நபர்

ஊழியத்தில் சில சூழல்களில் தவறான புரிந்து கொள்ளுதலால் ஊழியர் மனதைக் காயப்படுத்தும் வாய்ப்பு உள்ளது. பவுல் எபேசியருக்கு அறிவுறுத்துவது போல அவர் மன்னிக்கும் சுபாவம் உடையவராய்த் திகழ வேண்டும். ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். எபேசியர் 4 : 32

E. பவுலின் நிருபத்திலிருந்து முக்கியக் கருத்துக்கள்

2 தீமோத்தேயு 2

1, ஊழியர் போதிக்கிறவராக வ.2: விசுவாசிகளுக்குப் போதிக்க

2, போர் வீரராக ஊழியர் வ.3 : பாடுகளைச் சகிக்க

3, ஓட்டப்பந்தய வீரராக வ 5 : தேவ பக்திக்குரிய வழியில் நடக்கும் வாழ்வு.

4, விவசாயி வ.6 : கடினமாக உழைக்க

5, வெட்கப்படாத ஊழியன். 15 :வசனத்தை நிதானமாய்க் கையாள

6, நல்ல பாத்திரமாக 20-23 : பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட

7, பணிவிடைக்காரன் 24-26 : தாழ்மையுடன் எஜமானைச் சேவிக்க

GCI

F. தேவ அழைப்பு

கர்த்தர் சில விசுவாசிகளைப் பிரத்யேகமாக முழு நேர ஊழியத்திற்கு அழைக்கிறார்.

ஒரு மனிதர் ஊழியத்தில் அதிக கவனம் செலுத்துவதால் தன் உலக வேலையை விட்டு, முழு நேர ஊழியத்திற்குச் செல்ல வேண்டிய சூழல் வரும். ஆதி சீஷர்கள் உலக வேலையிலிருந்து அழைக்கப்பட்டார்கள். யோவான் 1: 35 – 51, மத்தேயு 4: 19

ஊழியர் தனது வாழ்வில் தேவ அழைப்பைப் பெற்றவராக இருப்பது அவசியம். எபிரெயர் 5 : 4

பணம் சம்பாதிக்கும் மற்றொரு தொழிலாகக் கருதக் கூடாது.

சோர்வு மற்றும் பாடுகளின் மத்தியில் நிலைநிற்க ஊழியருக்கு ஒத்தாசையாக தேவ அழைப்பு செயல்படுகிறது.

1. தேவ அழைப்பு பெற்ற மனிதர்களைக் குறித்த வேத உதாரணங்கள்.

a) மோசே : யாத்திராகமம் 3
நோக்கம் : தேவ ஜனத்தை மீட்க

b) கிதியோன் : நியாயாதிபதிகள் 6: 11-25
நோக்கம் : யுத்தம் செய்ய

c) எரேமியா : எரேமியா 1: 4-10
நோக்கம் : தேவ வார்த்தையைப் பேச

d) யோனா : யோனா 1-4
நோக்கம் : துன்மார்க்கம் நிறைந்த நகரம்

e) சாமுவேல் : 1 சாமுவேல் 3
நோக்கம் : தேவனுடைய ஆசாரியனாக

f) பவுல் : ரோமர் 15: 16
நோக்கம் : புறஜாதிக்குச் சுவிசேஷம் அறிவிக்க

GCI

2. தேவ அழைப்பை அறிந்து கொள்ளுதல்

a) அவர் தமது வார்த்தையின மூலம பேசுகிறார் : 2 தீமோ. 3:16; யோனா 1:1 — "கர்த்தருடைய வார்த்தை உண்டாகி"

b) தேவ பக்தியுள்ள ஆலோசகர்களால் உறுதிப் படுத்தப்படுதல். நீதிமொழிகள் 15 : 22, 20 : 18

c) தேவ சமாதானம் : பிலிப்பியர் 4:6 – 7

d) சூழ்நிலைகள் : யோனாவின் வாழ்வில் பாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி அவனைத் திருப்பினார்.

e) உள்ளான சாட்சி : ரோமர் 8: 16 – பரிசுத்த ஆவி நமது ஆவியில் சாட்சி பகர்கிறார்.

f) சொப்பனம் : யோவேல் 2: 28

g) கேட்கக் கூடிய சத்தம் : 1 சாமுவேல் 3 : 4,6,8

h) தீர்க்கதரிசன உரை : அப்போ. 13: 1-3

G. ஊழியத்துக்கான நல்ல நெறிகளை வளர்த்துக்கொள்ளுதல்

அறக்கொள்கைகளே ஒரு நபரின் குணதிசயம் மற்றும் வாழ்க்கை முறையை அமைக்கும் காரணியாகத் திகழ்கிறது.

அவசியத் திறவுகோல்கள்

மெய்யான *அகப்பே* அன்பு : 1 கொரிந்தியர் 13
தேவ சத்தியம் : 2 தீமோத்தேயு 3 : 16

1. மேய்ப்பனும் அவரது ஊழியமும்

a) மேய்ப்பன் என்னும் நிலையில் நல்ல உக்கிராணக்காரனாக தன் சொந்த நேரத்தைக் கையாளுகிறார்.
b) சபையைப் போஷிக்கும் படியாக வேத வசனத்தில் தன்னை ஆயத்தம் செய்ய நேரம் ஒதுககுகிறார்.
c) பயம் அல்லது பாரபட்சமின்றி சத்தியத்தைப் பேச வேண்டும்.
d) வேறொருவருடைய செய்தியைத் தன் செய்தியைப் போல உபயோகிப்பது தவறு.

GCI

2. மேய்ப்பனும் அவரது சபையும்

a) மேய்ப்பன் சபையுடனான அவரது ஒப்பந்தத்தை உடைப்பது தவறு ஆகும்.

b) தன் சபை மக்களின் முன் அனுமதியின்றி அவர்களுடைய இரகசியத்தை வெளிப்படுத்தக் கூடாது.

c) தான் செலுத்த வேண்டிய கட்டணங்களைச் செலுத்தாமல் இருப்பது தவறு. உண்மையுள்ளவராய் இருக்க வேண்டும்.

d) சபையால் தாங்கப்படுகிற போது, சபையின் தலைமைக்குத் தெரியாமல் வெவ்வேறு வேலை வாயிலாகப் பணம் சம்பாதிப்பது தவறு.

3. மேய்ப்பனும் உடன் ஊழியர்களும்

a) வேறொருவருடைய சபையுடனான அலுவல்களில் ஈடுபடுவது தவறான செயல்.
b) ஆடுகளைத் திருடாதவராகக் கவனமாய் இருக்க வேண்டும்.
c) வேறொரு மேய்ப்பனைக் குறித்துத் தவறாகப் பேசக் கூடாது.

4. மேய்ப்பனும் அவருக்கு முன் இருந்த ஊழியர்களும்

ரோமர் 14:4 "மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி அவன் நிலைநிறுத்தப்படுவான் தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே."

a) முன் இருந்த ஊழியரைக் குறித்த நல்லவைகளைப் பேச வேண்டும்.
b) அவர் செய்த நல்லவைகளைப் பாராட்டுவதை விளங்கப் பண்ணுங்கள்.
c) சபையைக் காண வருவாரானால் அவரைக் கணம்பண்ணி ஏற்றுக் கொள்ளுங்கள.
d) பொறுப்பேற்ற உடனே அவரது சகல ஊழியமுறைகளையும் மாற்றி விடாதீர்கள்.

அவரைப் போலவே நீங்களும் மாற்றப்படும் வேளை வரும். உங்களுக்குப் பின் வருபவரால் எவ்வாறு நடத்தப்பட விரும்புகிறீர்களோ அப்படியே அவரை நடத்துங்கள்.

5. மேய்ப்பனும் அவருக்குப் பின் வரும் ஊழியர்களும்

a) உங்களுக்குப் பின் வரும் ஊழியருக்குத் தேவையான உதவி செய்யுங்கள்.

b) பெருந்தன்மையுடன் விலகி, உங்களுக்குப் பின் வருபவர் எழும்ப உதவுங்கள். இயேசுவைக் குறித்த யோவான் ஸ்நானகனின் அபிப்பிராயத்தைப் போலவே உங்களுக்கும் இருக்க வேண்டும். **"அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்."** யோவான் 3:30

c) முன்னால் சபை உறுப்பினர் ஆலோசனை பெற வந்தால் உங்களுக்குப் பின் வந்த ஊழியரிடம் திருப்பி விடுவது சாலச் சிறந்தது.

d) உங்களுக்குப் பின் வருபவர் உங்களைவிட அதிகமாக சாதித்தால் அதைப் பார்த்துப் பொறாமைப்படாதீர்கள்.

e) முன்னால் சபையில் ஏதேனும் முக்கிய நிகழ்ச்சிகளை நடத்த அழைக்கப்பட்டால் உங்களுக்குப் பின் வந்த ஊழியரிடம் ஆலோசிப்பது உங்களைச் சிறந்தவராக வெளிப்படுத்தும்.

6. மேய்ப்பனும் பொருளாதாரமும்

பவுல் தீமோத்தேயு மற்றும் அவருக்குப்பின் வருபவர்கள் மிக முக்கியமான படுகுழியில் இருந்து தப்பிக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கத் தவறவில்லை.

a) சில சூழல்களில் மேய்ப்பன் தன் சபைத் தலைமையை அதிக உதவி செய்ய வேண்டுவது தவறல்ல. தந்திரமான வழியில் பணம் சம்பாதிப்பதை விட்டுத் தனக்குத் தகுதியான விதத்தில் பணம் பெறுவதே சிறந்தது.

b) மேய்ப்பனும் தொழில் முயற்சியும்

சிறிய சபையில் ஊழியம் செய்பவர் தனது குடும்பத் தேவைக்காக உழைக்க வேண்டி வந்தாலும் அது தற்காலிக உத்தியாகவே கருதப்பட வேண்டும்.

GCI

2 தீமோத்தேயு 2:4 "தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்."

வேலைக்காரன தன் கூலிக்குப் பாத்திரனாய் இருக்கிறான் என்று 1 தீமோத்தேயு 5:18 ல் வேதம் கூறுகிறது.

c) மேய்ப்பன் கடன்காரராயிருக்கலாமா?

அவர் தனக்குள்ளதை வைத்து தன்னை நடத்தப் பழகிக் கொள்ள வேண்டும். கடன் பெறுவதானாலும் வங்கியில் பெறுவதாயிருப்பது சிறந்தது.

பொதுவாகவே ஒரு மேய்ப்பன் கடன் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

d) மேய்ப்பனும் சபையின் பணமும்

மேய்ப்பன் ஒருபோதும் தன் சொந்த உபயோகத்திற்காக சபையின் பணத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது, உண்மையாகவே அதைத் திரும்ப வைத்து விடுவோமென எண்ணினால் கூட.

சபையின் பொருளாலராக மேய்ப்பன் ஒருபோதும் செயல்படலாகாது.

## II மேய்ப்பனின் அடிப்படை உறவு

இப்பகுதியில் கீழ்காணும் பகுதிகளைப் பார்ப்போம் :

- தேவனுடன் உள்ள மேய்ப்பனின் உறவு
- மனைவி மற்றும் குடும்பத்துடன் உள்ள மேய்ப்பனின் உறவு
- சபை மக்களுடனான மேய்ப்பனின் உறவு
- சபைத் தலைமைத்துவத்துடன் உள்ள மேய்ப்பனின் உறவு
- ஸ்தல சபையைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் மேய்ப்பனின் உறவு

### A. தேவனுடன் உள்ள மேய்ப்பனின் உறவு

மேய்ப்பன் தேவனுடன் நல்ல உறவு வைத்திருப்பது அவசியம். இவ்விடத்திலிருந்து தான் ஜீவன் சபைக்குள் ஊடுருவிச் செல்லும். மத்தேயு 6 : 33

GCI

தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்ட்ட பெரிய தேவ ஊழியர்கள் தேவனுடன் உள்ள உறவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றனர். யோவான் 15 : 5

E. M. பவுண்ட்ஸ் என்னும் ஊழியர் இவ்வாறு கருதுகிறார் : சபையின் இன்றைய தேவை அதிக ஆள் பலமோ அல்லது சிறந்த நபர்களோ அல்ல, புதிய ஸ்தாபனமோ நவீன வழிமுறைகளோ அல்ல, மாறாக ஜெபத்தில் வலிமை வாய்ந்த மனிதர்களே. பரிசுத்த ஆவியானவர் திட்டங்களை அல்லாமல் ஜெபிப்பவர்களையே அபிஷேகிக்கிறார். (E. M. Bounds Power Through Prayer, 12)

1. ஆண்டவருடைய வார்த்தை

a) ஆண்டவருடைய வார்த்தை நமது ஊழியத்தின் ஆதாரம் மத்தேயு 4 : 4
b) பாவத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. சங்கீதம் 119:11
c) இரட்சிக்கக்கூடிய வலலமையுள்ளது. ரோமர் 1:16
d) ஆண்டவருடைய வார்த்தை நமது ஆயுதம். எபேசியர் 6 :17
e) ஆண்டவருடைய வார்த்தை நமக்கு வழிகாட்டுகிறது. சங்கீதம் 119:105
f) துர் உபதேசத்திலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. மத்தேயு 22 : 29
g) நமக்கு வெற்றியைக் கொடுக்கிறது. யோசுவா 1 : 8

2. ஜெபம்

a) ஜெபிக்கக் கட்டளை பெற்றுள்ளோம். 1 தெசலோணிக்கேயர் 5 :17

“கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள் அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.” 1 நாளாகமம் 16 :11

b) சோதனையில் விழுந்து போகாமல் ஜெபம் நம்மைக் காக்கிறது. மத்தேயு 26 : 41

c) தேவ மனிதர்கள் ஜெப வீரர்களாய்த் திகழ்ந்தனர்.

i) மோசே : யாத்திராகமம் 17:11

ii) சாமுவேல் : 1 சாமுவேல் 17:9

iii) தானியேல் : தானியேல் 6:10

d) இயேசு அதிக நேரம் ஜெபித்தார்.

i) மாற்கு1:35 : அதிகாலை

ii) மாற்கு 6:46 : ஜெபிக்க மலைக்குப் போனார்.

GCI

iii) லூாக்கா 6:12 : இரா முழுவதும் ஜெபித்தார்

e) ஆதித் திருச்சபைத் தலைவர்கள் ஜெபத்தில் நேரம் செலவிட்டனர். அப்போஸ்தலர் 6:4

3. கீழ்ப்படிதல்

மேய்ப்பனுக்கு இருக்கும் பெரிய அபாயம் மற்றவர்கள் கீழ்ப்படிய வேண்டுமெனப் போதித்தும் அவர்கள் வேதத்திற்குக் கீழ்ப்படியாதிருப்பது தான்.

a) தேவன் நமது சேவையை விட கீழ்ப்படிதலை அதிகமாக விரும்புகிறார்.

1 சாமுவேல் 17:9

b) கீழ்ப்படிதலுள்ள மனிதர்களின் உதாரணம்

நோவா : ஆதியாகமம் 6:22

ஆபிரகாம் : ஆதியாகமம் 22:4

யோசுவா : யோசுவா 11:15

பவுல : அப்போஸ்தலர் 26:19

c) தேவனுக்குக் கீழ்ப்படிதல் ஆவிக்குரிய அறிவிற்கு அவசியமான ஒரு திறவுகோல். யோவான் 7:17

B. மனைவி மற்றும் குடும்பத்துடன் உள்ள மேய்ப்பனின் உறவு

எபேசியர் 5 :22 – 6:4; 1 பேதுரு 3:1-7

**மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். எபேசியர் 5 :22**

**பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. 6:4**

1. மேய்ப்பனுடைய நிலையான திருமண வாழ்வின் முக்கியத்துவம்

a) மற்றவர்களைத் திருமணத்திற்கு ஆயத்தப்படுத்தும் பொறுப்பு அவருடையதாய் இருக்கிறது.

GCI

b) சிறப்பான ஜீவியம் செய்ய திருமணமானவர்களுக்கு போதிக்க வேண்டியவர்.

c) மற்றவர்கள் பின்பற்றும் மாதிரியாக இருக்க வேண்டியவர்.

2. மேய்ப்பனின் மனைவி

1 பேதுரு 3:1-7

மேய்ப்பனின் மனைவி அவரைக் கட்டியெழுப்பவும் உடைத்தும் போடவும் ஆற்றல் உடையவராய் இருக்கிறார். தனது விருப்பப்படியே அவரின் பலவீனத்தில் அவருக்கு உதவவோ அல்லது அவரைத் தாக்கவோ முடியும். கடினமான சோர்வான சூழ்நிலைகளில் அவருக்கு ஆதரவாய் நிற்கவும் இயலும். யோபுவின் உபத்திரவத்தில் அவர் மனைவி அவரை உற்சாகப்படுத்தவில்லை. “**நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் துஷித்து ஜீவனை விடும்**” யோபு 2: 9

a) அவள் வாழ்க்கை பிறரைக் கிறிஸ்துவிடம் ஆதாயப்படுத்தும் மாதிரியாய் இருக்க வேண்டும். வ. 1, 2
b) கீழ்ப்படிதலுள்ளவளாய் இருக்க வேண்டும். வ. 1
c) பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். வ . 2
d) உள்ளான அலங்காரத்திற்கு முக்கியத்துவம் தருபவள். வ3
e) கணவனைக் கனம்பண்ணுபவள். வ6
f) கணவனுக்கு ஏற்ற துணையாய் இருப்பவள்.

சில நடைமுறை ஆலோசனைகள

i) **நீங்கள் நீங்களாகவே இருங்கள்.**
ii) ஊழியத்தில் உங்களுக்கும் பங்கு இருக்கிறது என அறியுங்கள்.
iii) உணர்வுரீதியான ஆதரவை அளியுங்கள்.
iv) ஜெபத்தில் அவருக்கு ஆதரவளியுங்கள். ஒருவேளை தன் அன்பு மனைவியை விட வேறொருவரும் அவருக்காக ஜெபிக்கமாலிருக்கலாம்.
v) தேவனுக்காகப் பெரிய சாதனைகளைச் செய்ய ஊக்கமளியுங்கள்.
vi) சபையில் இக்கட்டான நேரத்தில் அவருக்கு உறுதுணையாய் இருங்கள்.
vii) உங்கள் நாவில் உண்மை இருக்கட்டும். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று மத்தேயு 12 : 34 கூறுகிறது.
viii) நகைச்சுவை உணர்வுடையவர்களாய் இருங்கள். அதிகக் கடினமான ஊழியத்தில் அருமருந்தாக நகைச்சுவை செயல்படும்.

GCI

ix) கிரமமான வேதபாடம் மற்றும் சந்திப்பு ஊழியம் செய்ய உற்சாகப்படுத்துங்கள். மற்றவர்களுக்குப் போதிக்கும் அவரும் நற்போதனை அடைய வேண்டியது அவசியம்.

x) அவரது நற்பெயரைக் குலைக்கும் செயல்களிலிருந்து அவரைக் காத்துக் கொள்ளுங்கள்.

xi) கனிவையும் பரிவையும் வெளிப்படுத்துங்கள்.

xii) சபை மக்களுக்கு உங்கள் உபசரிப்பை வெளிப்படுத்துங்கள்.

3. கணவனாக மேய்ப்பனின் பொறுப்புகள் எபேசியர் 5 :22-23

a) தலைவனாக முன் செல்ல வேண்டும். வ 23
தீர்மானம் செய்வதில் ஆவிக்குரிய தலைவனாய் வழிநடத்த வேண்டும். குடும்பமாக ஜெபிக்க ஊக்கமளிக்க வேண்டும்.

b) கிறிஸ்து நேசித்ததைப் போலவே நேசிக்க வேண்டும். வ 25, 33

அன்பு சாதாரண உணர்ச்சியை விட மேலானது.

c) பரிசுத்தத்திற்கு நேராக ஊக்கமளிக்க வேண்டும். வ 26

உலகப்பிரகாரமாக நடக்காமல் தேவ பயத்தில் வாழ உற்சாகப்படுத்த வேண்டும்.

d) போஷித்துப் பராமரிக்க வேண்டும். வ 29

சில கணவர்கள் தன் குடும்பத்தைவிட சபைக்கு அதிக பராமரிப்பைக் கொடுக்கிறார்கள்.

e) மனைவிகளுக்கு வேண்டிய கனத்தைச் செலுத்த வேண்டும்.

மேய்ப்பனின் சகல பாரத்தையும் பிரச்னையையம் சுமக்கும் மனைவியாய் செயல்படுவது கடினமான ஒன்று தான்.

4. தகப்பனாக மேய்ப்பனின் பொறுப்புகள் 1 தீமோத்தேயு 3:4; எபேசியர் 6: 4

"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்." 1 தீமோத்தேயு 3:4

"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக." எபேசியர் 6: 4

GCI

a) ஒரு தலைவனாக குடும்பப் பொறுப்புகளை நேர்த்தியாகச் செய்து பிள்ளைகளின் கனத்துக்குரியவராய் இருத்தல். 1 தீமோத்தேயு 3:4
b) தேவைப்படும் போது சிட்சிக்க வேண்டும். நீதி . 13: 24
c) கர்த்தருடைய வழிகளில் போதித்து வழி நடத்த வேண்டும். எபேசியர் 6: 4

5. உத்தமத்தின் திறவுகோல்கள்

a) மனைவியோ மற்றவர்களோ தவறாகப் புரிந்து கொள்ளும் வகையில் எந்த ஒரு பெண்ணிடமும் நடந்து கொள்ளாதீர்கள்.
b) உங்கள் மனைவியுடன் நெருக்கமான உண்மையான உறவை வளர்த்துக் கொள்ளுங்கள்.
c) எதிர் பாலருடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள்.
d) உங்கள் சிந்தையைக் காத்துக் கொள்ளுங்கள். 2 கொரிந்தியர் 10: 4,5

C. சபை மக்களுடனான மேய்ப்பனின் உறவு

1. இயேசுவே பிரதான மேய்ப்பர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். 1 பேதுரு 5: 4

a) மேய்ப்பராக உற்சாக மனதோடு செயல்பட வேண்டும். வருத்தத்தோடு அல்ல.
b) ஆவிக்குரிய ஆகாரத்தினால் அவர்களைப் போஷியுங்கள். மத்தேயு 4: 4
c) மாதிரியாய் சபையை வழிநடத்துங்கள். 2 கொரிந்தியர் 11: 1
d) மேய்ப்பனின் ஊழியத்தைச் செய்ய மற்றவர்களுக்கு ஊக்கமளியுங்கள். 2 தீமோத்தேயு 2:2
e) துர் உபதேசத்திலிருந்து காத்துக் கொள்ளுங்கள். 1 தீமோத்தேயு 4:1-6

2. மேய்ப்பன் கவனிக்க வேண்டிய நடைமுறை செயல்பாடுகள்

a) தொடர்ந்து வ்டுகளிலும் மருத்துவ மனைகளிலும் மற்ற பகுதிகளிலும் சந்திப்பு ஊழியத்தை செய்யுங்கள்.
b) பிறப்பு, இறப்பு, திருமணம், மரணம் போன்ற சபையாரின் முக்கிய சூழல்களில் அவர்களுடன் இருங்கள்.

GCI

D. சபைத் தலைமைத்துவத்துடன் உள்ள மேய்ப்பனின் உறவு

1. சபையின் ஒருமனதை எப்போதும் காத்துக்கொள்ள வேண்டும். எபிரெயர் 12 : 14

   பிசாசின் வேலை சபையில் பிரிவினையையும் குழப்பத்தையும் கொண்டு வருவது. இயேசு தமது சீஷர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டுமென ஜெபித்தார். யோவான் 13: 13

2. மற்ற தலைவர்களை போட்டியாளர்களாக நினைக்காமல் உடன் ஊழியராகப் பாவித்து செயல்படல் அவசியம். 1 கொரிந்தியா 12: 12

   மற்ற ஊழியர்களுடன் உள்ள உறவில் மேய்ப்பர் தாழ்மையைக் கடைபிடிக்க வேண்டும். மற்ற ஊழியத்தைக் குறித்து இறுமாப்பாகவோ பொறாமையாகவோ இருக்கக் கூடாது.

3. மற்ற தலைவரிடமிருந்தும் புத்திமதி வெளிப்படும் என ஏற்றுக் கொள்ள வேண்டும். நீதிமொழிகள் 15 : 22

   மேய்ப்பன் தனக்கே எல்லாம் தெரியும் என நினைக்கக்கூடாது. தனது ஊழியத் திறனை வளர்த்துக் கொள்ள மற்றவர்களிடமும் கற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேய்ப்பன் சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டுமே தவிர ஆதிக்கம் செலுத்துவதிலல்ல. மாற்கு 10 : 45.

E. ஸ்தல சபையைச் சுற்றியுள்ள சமுதாயத்தில மேய்ப்பனின் உறவு

1. நல்ல குடிமகனாய் இருங்கள். ரோமர் 13

2. இழந்து போனவர்களுக்கு வெளிச்சமாய் இருங்கள். மத்தேயு 5 : 14-16, யோவான் 8:12

3. நற்கிரியைகளினால் சுவிவேஷத்தை அறிவிக்க முயலுங்கள். எபேசியர் 5 : 16

## III. <u>மேய்ப்பனின் பொறுப்புகள்</u>

A. மேய்ப்பனும் பிரசங்கமும்

1 தீமோத்தேயு 4:2 வார்த்தையைப் பிரசங்கம்பண்ணு.

1. உங்கள் பிரசங்கத்தை ஆயத்தப்படுத்துதல்

2. கிரமமாய் செய்ய முயலுங்கள். (உ—ம்) ஒவ்வொரு வேத புத்தகமாகப் போதித்தல், தலைப்புப் பிரசங்கம்பண்ணுதல்

3. சபையின் மக்களை உதாரணமாகப் பிரசங்கத்தில் கொண்டுவராதபடி ஜாக்கிரதையாய் இருங்கள்.

4. எவ்விடத்தில், எப்போது, என்ன பிரசங்கம் செய்தீர்களென்னும் விவரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். ஒரே செய்தியை இருமறை கொடுப்பது தவறில்லை.

   (உ—ம்) பவுல் ஒவ்வொறு சபைக்கும் எழுதிய நிருபங்கள்.

5. தொடர்ந்து கற்றுக் கொள்ளுங்கள்.

   ‘‘புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்’’ நீதி 1:5

   புதிய படிப்புக்களைத் தொடரவும்.
   புத்தகங்களை வாசியுங்கள்.

   நல்ல குறிப்புகளை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

B. மேய்ப்பனும் ஆராதனையும்

யோவான் 4: 24

ஆராதனை நேரம்

a) ஆராதனைக்கு அழைப்பு

“கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.’’ சங்கீதம் 95:1—2

b) சாட்சிகள்

ஆண்டவருடைய தயவை உயர்த்தும் படியாக விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் ஒரு சந்தர்ப்பம்.



GCI

GCI

c) ஜெபம்

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஜெபிக்க இந்நேரத்தைப் பயன்படுத்தலாம். யாக்கோபு 5:16

d) காணிக்கை

காணிக்கை செலுத்துதலும் ஆராதனையின் ஒரு பகுதி என விசுவாசிகளை உணர்த்த வேண்டியது அவசியம். 1 கொரிந்தியர் 9:6-8

e) திருவிருந்து

இதற்குப் பயன்படும் சரியான வேத பகுதி 1 கொரிந்தியர் 11:17-34. அப்பம் மற்றும் திராட்சை ரசத்தின் முக்கியத்துவத்தை மேய்ப்பர் போதிக்க வேண்டும்.

f) பிரசங்கம்

வேத வசனப் பிரசங்கத்திற்காகப் போதிய நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

g) ஆராதனை முடிவு மற்றும் ஒப்புக் கொடுக்க அழைப்பு

இந்த நேரத்தில் மக்கள் வசனத்திற்கு ஒப்புக்கொடுத்து ஜெபிக்க முன்வர பயன்படுத்த வேண்டும்.

h) விசேஷ ஞானஸ்நான ஆராதனை

விசுவாசி தன் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்கப் பயன்படுத்தும் வாய்ப்பே ஞானஸ்நான ஆராதனை ஆகும். சில சபைகள் சபைகளுக்குள்ளேயும், சில சபைகள் ஆறு, குளம் போன்ற பொதுவான பகுதிகளிலும் ஞானஸ்நான ஆராதனையை நடத்துகின்றன.

1. ஞானஸ்நானம எடுத்துக் கொள்பவர்கள் ஞானஸ்நானம் மற்றும் மனந்திரும்புதல் குறித்த வேத போதனையைக் கொடுக்க வேண்டும்.
2. மாற்று உடை கொண்டு வர ஆயத்தப் படுத்துங்கள்.
3. சிறிய சாட்சி சொல்லுவது எப்படி என்பதைக் குறித்துக் கற்றுக்கொடுங்கள்.

GCI

4. ஞானஸ்நான ஆராதனையின் மாதிரி :

கேள்வி : " நீ பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இவ்வுலகத்தின் ஆடம்பரங்களையும் மகிமையையும் அதைப்பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும் மாம்ச இச்சைகளையும் பின்பற்றாத படிக்கும், தேவ கிருபையால் பழைய மனித சுபாவமாகிய இவைகளை வெறுக்கிறாயா?"

பதில் : ஆம்

கேள்வி : கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தேவனுடைய ஒரே பேரான குமாரனென்றும், பாவத்தின் பலனைச் சிலுவையில் சுமந்து தீர்த்தாரென்றும் விசுவாசித்து அவரை உம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறீரா?

பதில் : ஆம்

கேள்வி : தேவ கிருபையால் அவரது நாமத்தில் ஞானஸ்நானம எடுத்துக்கொள்ளும் நீர் இந்தப் புதிய வாழ்வில் தகுதியுள்ளவராக வாழ்வீரா ?

பதில் : ஆம்

கேள்வி : உமது விசுவாச அறிக்கையின் படியே பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

2. தேவன் மெய்யான ஆராதனைக்காரரைத் தேடுகிறார்.

a) உங்கள் சபையில் ஆராதனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுங்கள்.

**சங்கீதம் 22 :3 துதிகளுக்குள் வாசமாயிருக்கிறவர் — அதிக நேரம் கொடுங்கள்.**

b) நல்ல இசைக் கருவிகளை வாங்க பணம் ஒதுக்குங்கள்.

**சங்கீதம் 150 :3—5 எக்காள தொனி வீணை சுரமண்டலம் தம்புரு யாழ் தீங்குழல்.**

c) ஆவியின் நடத்துதலுக்கு ஒப்புக் கொடுக்கும் மனப்பாண்மையுடன் இருங்கள்.

GCI

2 கொரிந்தியர் 3:17 சுயாதீனம்

ஆராதனையை நாம் விரும்பும் வழியில் நடத்த முயற்சிக்கக் கூடாது.
உதாரணம் **சங்கீதம்** 150 :4…. நடனத்துடன்
**சங்கீதம்** 149 …. புதிய பாடல்

C. மேய்ப்பனும் வீடு சந்திப்பும்

மற்ற வேலைகளைப் போலல்லாமல் சந்தீக்கக் கூடிய விதத்தில் மேய்ப்பனுக்கு எப்பொழுதும் திறந்த வாசல் காணப்படுகிறது. விசுவாசிகள் அழைக்கட்டும் அதன்பின் அவர்களுடைய வீடுகளில் சென்று அவர்களைச் சந்திக்கிறேன் என்று அழைப்பிற்காகக் காத்திருக்காதீர்கள். வாஸ்தவ நிலையில் நீங்கள் மேய்ப்பனாகையால் உங்கள் மந்தையின் நிலையை அறிய சந்திப்பின் ஊழியம் அவசியம்.

மேய்ப்பனின் சந்திப்பின் ஊழியம் மிகவும் அத்தியாவசியமானது ஏனெனில் இது மேய்ப்பனின் இருதயத்தைக் காட்டுகிறது. இந்த பகுதியில் நிர்விசாரம் விமர்சனத்திற்கு வழிவகுக்கிறது.

1. நீங்கள் சந்திக்கும் போது, இந்த ஊழியத்தின் முறையான குறிப்புகளைப் பதிவு செய்யுங்கள்.

   - ❖ எப்பொழுது சந்தித்தீர்கள்?
   - ❖ எவ்வளவு நேரம் செலவழித்தீர்கள்?
   - ❖ எங்கே சந்தித்தீர்கள்?
   - ❖ ஏதாவது பிரச்சனை இருந்ததா?

2. நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிடிலும் சந்திப்பின் ஊழியம் செய்ய வேண்டும் என்னும் சுய கட்டுப்பாட்டைக் கடைபிடியுங்கள்.

3. எதிர்பாலரை சந்திக்க அழைக்கப்பட்டால் ஞானமுடன செயல்படக் கவனமாய் இருங்கள்.

   சில தலைவர்களையோ உங்கள் மனைவியையோ அழைத்துச் செல்லுங்கள்.

4. உங்கள சந்திப்பின் ஊழியத்தைச் சரியான முறையில் திட்டமிடுங்கள்.

   பகுதிவாரியாகப் பிரித்து சந்திக்க முற்படும் போது, ஒரே பகுதியைத் தொடர்ந்து சந்திக்காமல் நேரம் மற்றும் எரிபொருள் செலவை மிச்சப்படுத்தலாம்.

GCI

5. விசேஷமாக வியாதியஸ்தர்களைச் சந்தியுங்கள்.

அவர்கள் மருத்துவமனையில் இருந்தாலும் வீட்டிலிருந்தாலும் அவர்களைச் சந்திப்பதன் வாயிலாகத் தன் கரிசனையை வெளிப்படுத்த வேண்டியது மேய்ப்பனின் கடமை. அவர்களைச் சந்திக்கும் போது உற்சாகத்தையும் நம்பிக்கையையும் சாதகமான மனநிலையை வளர்க்கும் விதத்தில் நடந்து கொள்ளுங்கள்.

6. முதியவர்களின் வீடுகள் மற்றும் சந்திக்கும் வீடுகளில் உள்ள முதியோரை நினைவு கூறுங்கள். ஒரு வேளை மற்றவர்களைவிட இவர்கள் அதிக தனிமையை உணர்வர். சில போதகர்கள் நோயினிமித்தம் சபைக்கு வர இயலாத மக்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குத் திருவிருந்து கொடுப்பர்.

D. மேய்ப்பனும் ஆலோசனை ஊழியமும்

2 கொரிந்தியர் 1:3-4

விசுவாசிகள் மந்தையைப் போன்றவர்கள். அவர்களுக்கு ஆலோசனை அவசியப் படுகிறது. அடுத்த பாடத்திட்டத்தில் ஆலோசனை ஊழியம் குறிதத தனி பாடம் உள்ளது. கீழ்க்காணும் காரியங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

1. ஆலோசனை கொடுப்பதில் வேத அடிப்படையைக் கடைபிடிக்கவும். 2தீமோத்தேயு 3:16

2. ஆலோசனை கொடுப்பதில் இரகசியத்தைக் காத்துக் கொள்வதுடன் கோள் சொல்லாமலும் இருக்க வேண்டும். நீதிமொழிகள் 11:13

3. எதிர்பாலருக்கு ஆலோசனை கொடுப்பதில் கவனமாய் இருக்க வேண்டும்.

**உங்கள் நன்மை துஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்.**
**ரோமர் 14 : 16**

எதிர்பாலருக்கு ஆலோசனை கொடுக்கும் போது மற்றொரு நபரும் உடனிருப்பது நலம். திறந்த வெளியில் ஆலோசனை கொடுப்பது நல்லது.

4. நல்ல ஆலோசகரின் பண்புகள் : (Selected from Montgomery, Robert L. *Listening Made Easy* (Amacom, 1981)

a) பேசும்போது அவர் என்னைப் பார்ததுப் பேசுகிறார்.
b) நான் சொல்வதைத் தெளிவாகப் புரியும்படி கேள்வி கேட்கிறார்.

GCI

c) குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து எவ்வாறு உணர்கிறேன் என்று அறிவதில் கரிசனையைக் காண்பிக்கிறார்.
d) நான் சொல்வதைப் பரிவுடன் கவனிக்கிறார்.
e) என்னை அவசரப்படுத்துவதில்லை.
f) உணர்ச்சிரீதியான கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்.
g) அசைவு மற்றும் புன்முறுவலுடன் பதிலளிக்கிறார்.
h) மிகவும் நெருக்கமாகக் கவனிக்கிறார்.
i) என்னைக் குறுக்கிட்டுப் பேசுவதில்லை.
j) என் நினைவுகளை எடுத்துச் சொல்லும்வரை குறிப்பிட்ட காரியத்தில் கவனம் வைக்கிறார.

E. மேய்ப்பனும் திருமண ஆயத்தமும்

1. கணவன் மனைவி உறவைக் குறித்த திருமணத்திற்கு முன்னான ஆலோசனை கொடுங்கள். எபேசியர் 5:22-31

2. பொருளாதார ஆலோசனை கொடுங்கள்

3. திருமண ஆராதனைக்கு ஆயத்தமாகும்படி திட்டமிட அவர்களுக்கு உதவுங்கள்.

F. மேய்ப்பனும் மரணமும்

யோவான் 11: இயேசு மற்றும் லாசருவின் மரணம்.

1. மரணம் நேரிட்ட வீட்டிற்கு எவ்வளவு சீக்கிரம் செல்ல முடியுமோ அவ்வளவு துரிதமாக சந்தியுங்கள்.

2. அடக்கத்திற்கான ஆயத்தங்களில் உதவுங்கள்.

3. அடக்கத்திற்குப் பின் செய்ய வேண்டிய பின் தொடர் பணியை மறந்து விடாதீர்கள்.

G. மேய்ப்பனும் பிரதிஷ்டை ஆராதனையும

1. குழந்தைகள் : 1 சாமுவேல் 1:22

வாசிக்கக்கூடிய சிறந்த வேத பகுதிகள் மாற்கு 10:13 – 16 அல்லது மத்தேயு 19: 13 – 15. பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்பட வேண்டிய வழியில் வளர்ப்பதைக் குறித்து பெற்றோருக்குப் போதிக்க வேண்டும். பிரதிஷ்டையின் ஒரு மாதிரியைக் காண்போம்.

GCI

போதகர் : இந்தப் பிள்ளையைக் கர்த்தருடைய வழியில் நடத்தி கர்த்தராகிய இயேசுவை சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்ளும் வகையில் வளர்க்க வாக்குக் கொடுக்கிறீர்களா?

பெற்றோர்: ஆம்

போதகர் : பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் இந்நக் குழந்தையைப் (பிள்ளையின் பெயர்) பிரதிஉஷ்டை செய்கிறேன். ஆமென்.

2. கட்டிடம், புதிய வீடு பிரதிஉஷ்டை : 2 நாளாகமம் 6

H. மேய்ப்பனும் நிர்வாகமும்

நிர்வாகத்தில் திறமையான ஒருவரை மேய்ப்பர் தேர்ந்தெடுப்பது நல்லது. 1 கொரிந்தியர் 12: 28b

சில சமயங்களில் இப்படிப்பட்ட தாலந்து உடையவர்கள் இல்லாததால் அனைத்து நிர்வாகத்தையும் மேய்ப்பரே செய்ய வேண்டியதாகிறது. நிர்வகிக்க வேண்டிய சில முக்கியக் குறிப்புகள் பின் வருவன.

1, கடிதத் தொடர்பு மற்றும் சகல தகவல் தொடர்புகளையும் சரியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

2, சபை உறுப்பினர்களின் குறிப்பேடுகள் இருப்பின் அதைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

3, சபையின் சகல சொத்துக்களும் தனி நபர் பெயரில் இல்லாமல் சபையின் பெயரிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

4, சபையின் பொருளாதார ஆவணங்கள் அனைத்தும் கிரமமாய் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். நம்பகமான ஒரு நபரைப் பொருளாளராக நியமித்து கணக்குகள் அனைத்தும் நடுநிலை காக்கும் ஒரு நபரால் அல்லது நிறுவனத்தால் தணிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும். 2 கொரிந்தியர் 8 : 20,21ல் பவுல் சொல்வது போல நாம் பணத்தைக் கையாளுவதில் ஜாக்கிரதையாய் இருப்பது அவசியம்.

5, ஒரு செயலாளரை நியமித்து சகல கூட்டங்களையும் பதிவு செய்ய வேண்டும்.

GCI

6, சபை கட்டிடங்கள் முறையாகக் கண்காணிக்கப்பட வேண்டும். தேவைப்படும் பராமரிப்பு வேலைகளை ஏற்ற நேரத்தில் கவனிக்க வேண்டும். சபையின் சுற்றுப்புறம் விசேஷமாக கழிவறைகள் சுத்தமாகக் காக்கப்பட வேண்டும். தேவன் சுத்தமான இருதயத்தை எதிர்பார்த்தாலும் மனிதர்கள் வெளிப்புறத் தோற்றத்தை முக்கியப்படுத்துகிறான்.

I. மேய்ப்பனும் தலைவர்களைக் குறித்த கரிசனையும்

சபை வளரும் நிலையில், அவரது உடன் ஊழியர்களும் தலைவர்களும் அதிகரிக்க வேண்டியது அவசியம். இத்தலைவர்களின் நலனைக் கருத்தில் கொள்ள வேண்டியது மேய்ப்பனின் கடமை. அவ்வாறு செய்வதால் ஊழியத்தில் இன்னமும் அதிக பயனள்ள விதத்தில் அவர்கள் ஈடுபடுவார்கள். தலைமைத்துவத்தைக் குறித்த நமது பாடத்தில் இக்காரியத்தை நாம் குறிப்பிட்டாலும் சில முக்கியக் கருத்துக்களைக் கீழ்காண்போம்.

1. சரியான விதத்தில் ஊழியத்திற்கு அவர்களைப் பழக்குங்கள்

   உங்கள் மற்ற தலைவர்களுக்குச் சரியான பயிற்சி இல்லாமல் குறிப்பிட்ட காரியத்தைச் செய்யப் பணித்தால் அவர்களுடைய இயாலாமை அவர்களைச் சோர்வடையச் செய்யும்.

2. அவர்கள் சபையின் வெற்றிக்கு வகிக்கிற முக்கிய பங்கைப் பாராட்டும் வகையில் சில ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

3. உண்மையாய் ஊழியம் செய்பவர்கள் ஊக்குவிக்கப் பட்டு மேலும் தங்கள் திறனை வளர்த்துக்கொள்ள ஏதுவாக மேலும் சில பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

GCI

## பிற்சேர்க்கை

## திருமண ஆராதனை

இங்கே கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை விவாக ஆராதனை முறையில் சில சிறிய மாற்றங்கள் இருப்பதைக் காணலாம்.

விவாக ஆராதனைக்காக மக்கள் கூடிவரும் போது, ஊழியர் இவ்வாறு ஆரம்பிக்கிறார்.

நண்பர்களே, இந்தப் புருஷனையும் இந்த ஸ்திரீயையும் தேவ சமுகத்திலும் இந்த சபைக்கு முன்பாகவும் பரிசுத்த விவாக நிலையில் சேர்க்கும்படி, இவ்விடத்தில் கூடி வந்திருக்கிறோம். விவாகமானது மேன்மையான நிலையாய் இருக்கிறது. அது மனுஷன் பாவம் செய்யாதிருந்த காலத்தில் தேவனால் நியமிக்கப்பட்டதாயும், கிறிஸ்துவுக்கும் அவர் திருச்சபைக்கும் உள்ள தெய்வீக ஐக்கியத்தையும் காட்டுகிறதாயும் இருக்கிறது.

இயேசு கிறிஸ்து கலிலேயாவிலுள்ள கானா ஊரில் நடந்த விவாகத்துக்குப் போயிருந்து முதலாம் அற்புதத்தைச் செய்து இந்தப் பரிசுத்த நிலைமையை மேன்மைப்படுத்தினார். அப்போஸ்தலனாகிய பவுலும் இது எல்லாராலும் கனமாக எண்ணப்படத்தக்கதென்று போற்றியுள்ளார். ஆகையால் இதை அற்பமாய் எண்ணி விவாகம் செய்யாமல் விவேகத்தோடும் தகுந்த யோசனையோடும் பயபக்தியோடும் விவாகம் செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட மேன்மையான நிலையில் இவ்விரண்டு பேரும் இணைந்து, இருதயங்களையும் வாழ்க்கைகளையும் ஐக்கியப்படுத்தி விருப்பங்கள் மற்றும் நம்பிக்கைகளுடன் சேர வந்துள்ளனர். ஆகவே இந்த மேன்மையான ஐக்கியத்தில் இணையவிருக்கும் மணமக்களின் மேல் தேவ தயவும் ஐசுவரியத்தைத் தருவதும் வேதனையைக் கூட்டாததுமான அவருடைய ஆசீர்வாதத்தினை நாட உங்களை வேண்டுகிறேன். இப்பொழுது அவருடைய ஆசீர்வாதத்தை நாடுவோம்.

(வந்திருக்கும் அனைவரையும் ஜெபத்தில் முழங்கால்படியிட அழைக்கிறார்)

எங்கள் பரலோகப் பிதாவே, உமது கிருபையால் இந்தத் திருமணத்தை நிரப்ப வரும்படி உம்மை அழைக்கிறோம். திருமணம் செய்யப்போகிற இவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து, உண்மையான நோக்கத்துடனும் நிறைவான அன்புடனும் தத்தம் வாக்குகளை வாழ்க்கைப் பயணத்தில் நிறைவேற்றி ஒருவருக்காக ஒருவர் வாழ உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

*ஊழியர் தொடர்ந்து சொல்ல வேண்டியது*

இவர்களை ஒழுங்கின்படி ஒருவரோடொருவர் சட்டப்படி சேர்க்கக்கூடாத நியாயமான முகாந்தரத்தை யாரானாலும் சொல்லக்கூடுமானால் இப்பொழுதே அதைச் சொல்லக்கடவன். இல்லாவிடில் இனி ஒருக்காலும் சொல்லாதிருக்கக்கடவன்.

GCI

உண்மையான அன்பு மற்றும் நேர்மை ஆகிய இரண்டுமே மகிழ்ச்சியான குடும்பத்தின் அடித்தளமாக அமையும் என்பதை நினைவுகூற, தேவ சமுகத்தில் நிற்கிற உங்களுக்குக் கட்டளையிடுகிறேன். நீங்கள் எடுத்துக் கொள்ளப் போகும் வாக்குகளை கவனமாய்க் கைக்கொண்டு தேவ சித்தம் செய்ய முற்பட்டீற்களானால் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சிமிக்கதாயும் உங்கள் வீடு சமாதானத்தில் நிலைத்தும் இருக்கும்.

நீங்கள் எடுத்துக் கொள்ளப் போகும் இந்த வாக்குகளைவிட அதிக முக்கியமான பரிசுத்தமான இணைப்பாகக் கூறமுடியாது. தெய்வீக அன்பிலும் ஆழமான பரிசுத்த விவாக நிலையிலும் நீங்கள் நுழையவிருக்கிறீர்கள்.

(ஊழியர் புருஷனைப் பார்த்துச் சொல்ல வேண்டியது)

“...... நீ தேவ நியமத்தின் படி பரிசுத்த விவாக நிலையில் ஒருமித்து வாழ, இந்த ஸ்திரீயை உனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு, சுகத்திலும் துக்கத்திலும் இவளை நேசித்து ஆதரித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர்முகம் பாராமல் இவளுக்கே புருஷனாயிருப்பாயா?”

அதற்குப் புருஷன் சொல்ல வேண்டியது – “இருப்பேன்.”

(ஊழியர் ஸ்திரீயைப் பார்த்துச் சொல்ல வேண்டியது)

“…..நீ தேவ நியமத்தின் படி பரிசுத்த விவாக நிலையில் ஒருமித்து வாழ, இந்த மனுஷனை உனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, இவனுக்குக் கீழ்ப்படிந்து பணிவிடை செய்து, இவனை நேசித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர்முகம் பாராமல் இவனுக்கே மனைவியாயிருப்பாயா?”

அதற்குப் மனைவி சொல்ல வேண்டியது – “இருப்பேன்.”

ஆராதனை நடத்துபவர் மணமகளின் தகப்பனைப் பார்த்துச் சொல்ல வேண்டியது

விவாகம் செய்ய இந்த ஸ்திரீயை இந்தப் புருஷனுக்குக் கொடுக்கிறது யார்?

தகப்பனார் சொல்ல வேண்டியது : “நான் கொடுக்கிறேன்”

ஆராதனையை நடத்துகிறவர் ஸ்திரீயினுடைய தகப்பன் கையினால் அவளுடைய வலது கரத்தை புருஷன் தன்னுடைய வலது கையால் ஸ்திரீயினுடைய வலதுகையைப் பிடிக்கச் செய்து, தாம் சொல்லுகிற பிரகாரம் அவனைச் சொல்லச் செய்ய வேண்டும்.

____________________ ஆகிய நான் ____________________________ ஆகிய உன்னை இன்று முதல் எனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி நன்மையிலும் தீமையிலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும்

GCI

துக்கத்திலும் மரணம் நம்மைப் பிரிக்குமளவும் உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் வாக்குக் கொடுக்கிறேன்.

பின்பு ஸ்திரீயானவள் தன் வலது கையினால் புருஷனுடைய வலது கையைப் பிடித்து, ஆராதனை நடத்துகிறவர் சொல்லுகிற பிரகாரமாய்ச் சொல்ல வேண்டியதாவது:

____________________ ஆகிய நான் ____________________________ ஆகிய உம்மை இன்று முதல் எனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி நன்மையிலும் தீமையிலும் வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் துக்கத்திலும் மரணம் நம்மைப் பிரிக்குமளவும் உம்மை நேசிக்கவும் ஆதரிக்கவும் உமக்குக் கீழ்ப்படியவும் வாக்குக் கொடுக்கிறேன்.

பின்பு போதகர் சபையாரை நோக்கிச் சொல்ல வேண்டியதாவது:

--------------------- இன்னானும் ---------------------------------- இன்னாளும் பரிசுத்த விவாக நிலையில் ஒருமிதது வாழச் சம்மதித்து தேவ சந்நிதியில் இந்த சபைக்கு முன்பாகவும் அதை அறிக்கையிட்டு ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுத்து உறுதிக்கு அடையாளமாகக் கைபிடித்துத் தெரியப்படுத்தினபடியினாலே இவர்கள் புருஷனும் மனைவியுமாயிருக்கிறார்கள் என்று, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அறிவிக்கிறேன். ஆமென்.

போதகர் மணமக்களை முழங்கால்படியிட அறிவுறுத்தி தொடர்ந்து சொல்ல வேண்டியதாவது:

பிரியமானவர்களே, உங்கள் வாழ்வில் புதிய காலகட்டத்தை எட்டியுள்ளதை இந்நாள் குறிக்கிறது. இது முதல் உங்கள் வழிகள் தனிமையானவை அல்ல, இசைவானவை. உங்கள் இருதயத்தில் அன்பு உயர்ந்திருக்கட்டும். சபையாராக இணைந்து உங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்து அவரது நிறைவான கிருபையாலே உங்களை நிரப்பி, உங்களைத் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்டுக்கொண்ட கர்த்தரிடத்தில் ஏறெடுக்கும் ஜெப சத்தமும் துதியின் நறுமணமும் தொடர்ந்து விளங்கும் வீட்டை உருவாக்க உங்களுக்கு உதவி செய்வாராக.

வாழ்க்கைப் பயணத்தில் இணைந்து செய்யும் பயணத்தில், இயேசுவுடன் நடந்த எம்மாவூர் சீஷரைப் போலவோ ஆண்டவர் உங்கள் அருகே கடந்து வந்து உங்களுடன் நடப்பாராக. மகிழ்ச்சியான திருமண வாழ்வுக்கு ஆதாரமாக பரலோகம் தன் நிறைவான ஆசீர்வாதத்தினாலும் மெய்யான அன்பினாலும் உங்களை நிரப்புவதாக.

போதகர் சபையைப் பார்த்து சொல்ல வேண்டியதாவது:

நாம் அனைவரும் தலை வணங்கி அர்ப்பணிப்பின் ஜெபம செய்வோம்.
பரலோகப் பிதாவே, நீரே சகல ஆசீர்வாதத்தின் ஊற்றுக்கண் மற்றும் வாழ்க்கையின் ஆதாரம். எங்கள் வாழ்வின் பாதுகாப்பும் வழிநடத்துதலும் நீரே. நீரே வீடுகளைக் கட்டுகிறவா. இப்போதும் இம்மணமக்கள் தங்கள் வாக்குகளைக் காத்து நடக்க

உமது பரிசுத்த ஆவியின் துணையை நாடுகிறோம். உமது சத்தியத்தில் நடக்கும்படியாகவும் உமது ஐக்கியத்திலும் பூரண சமாதானத்திலும் இவர்கள் பூமிக்குரிய வாழ்வு நிறைவடையும் வரையிலும் பரஸ்பர அன்பில் நிலைத்திருக்கத்தக்கதாக உமது கிருபைகளால் இவர்களை நிரப்புவீராக. இவைகளை ஆசீர்வாதிக்கப்பட்ட இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உங்கள்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி, உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்.** ஆமென்.

இந்த வேளையில் மணமக்கள் திருமணப்பதிவு செய்யும் போது, பாடல் குழுவினர் பொருத்தமான பாடல்களைப் பாடலாம்.

பின்னர் போதகர் மணமக்களை எழுந்திருக்கச் செய்து சொல்ல வேண்டியதாவது

திரு ......................... திருமதி............................ அவர்களை வாழ்த்தி அவர்களை அறிமுகப்படுத்துவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

உடனே சபையார் கரகோஷம் எழுப்பி மணமக்களை வாழ்த்தலாம்.

List of References:

1. Larson, Bruce, Anderson, Paul and Self, Doug. *Mastering Pastoral Care* (Oregan: Christianity Today, Inc. 1990)

2. Montgomery, Robert L *Listening Made Easy* (Amacom, 1981)

3. Riggs, Ralph. M. *The Spirit-Filled Pastor's Guide* (Missouri Gospel Publishing House, 1948)

4. Rozell V., Jack. *Pastoral Ministries* ( Belgium : International Correspondence Institiute, 1980 )

5. Stowel, L. Eugene. *The Ministry of Shepherding* ( Missouri : Beacon Hill Press, 1976, pp.203-215)



GCI